13



# மலைகளைப் பேசவிடுங்கள்

நாடக மாந்தர் :- அடிமை விலங்குடன் அடிமைத்தளையை அறுத்தெறிந்து விடுதலை கொண்ட மலையகத்தை உருவகிக்கும் கருமாரி.

மலையகச் சமூகங்களின் விடுதலைக்கு வலிமை மிக்ககுரல் கொடுக்கும் பாரதி.

பிச்சைக்காரி

அடக்குமுறையாளன்

சந்தர்ப்பவாதி

ஐயர்

ஒட்டுண்ணி

பிரதிநிதி

தொழிலாளர்கள் - 8 பேர்

திரை விலகல்

(காலைப்பொழுது புலர்தல் - இசை)

பாலாஜி, சந்தர்ப்பவாதி, அம்மன் சிலைக்கு முன்னால் உறைநிலையில் இருத்தல். பாத்திரங்கள் உறைநிலையிலிருந்து விடுபடல்.

ஐயர் :- (பின்னணி)

சுக்லம் பரதம் விஸ்நும் சசிவர்ணம் சதுர்புஜம் பிரசன்ன வதனம் சர்வ விக்னோப சாந்தகே....

பாலாஜி :- கருமாரி அம்மா, எங்க குலத் தாயே! நாங்க படுற கஷ்டமெல்லாம் ஒன்கண்ணுக்கு தெரியலியா? மாரிதாயே, எங்க முத்துமாரி, காலங்காலமா ஒன்னையே நெனச்சி உருகி உருகி கேட்கிறேன். ஒன் அருள் எப்பத்தான் கெடைக்கும்? கஷ்டப்படுறவங்க கொரய யெல்லாம் நீக்கிடும் தாயே, எங்க கஷ்டங்களையெல்லாம் ஏம்மா பார்த்துக்கிட்டு இருக்கிற ?

ஐயர் :- (பின்னணி)

தசாங்கம் ருக்னம் தூபம், சகம் சம் சாரனோகரம் கபிலஸ் இருசகம் யச்சம் பிரகில் ககாம்.

சந்தர்ப்பவாதி :- சாமி ஒன்ன எந்த நாளும் கும்பிடுறேன். நீதான் என்னமோ என்ன பாக்கவே மாட்டேங்கிற! நான் யாருக்கு கொடுமை செஞ்சேன். எவன்யெவன் என்னென்ன சொல்றான்னோ அவங்களுக்கெல்லாம் தலைய ஆட்டிக்கிட்டு இருக்கேன்.

ம்..... ஒன்னும் சரிவர மாட்டேங்குதே! கணக்குப்புள்ள ஐயாவுக்கு, தொரமாருக்கு ஏன்................ டவுன்லவுள்ள பெரிய பெரிய ஆளுங்களுக்கெல்லாம் மால போட்டே என் கையி அலுத்து போச்சு. எங்கேயும், நாலுபணம் கையில வந்து சேரல!

சாமி, நீதான் ஆயி என்ன காப்பாத்தனும் என் கஷ்டமெல்லாம் ஒங்கிட்ட சொல்லி அழுறேன்.............. எனக்கு ஒரு வழி காட்ட மாட்டியா........

ஐயர் :- (பின்னணி)

ஈசானம் சர்வவிதியானம் ஈஸ்வரிக்கும் சர்வ பத்ரனம் பிரமதாதி பதிர்....

பாலாஜி :- காளி தாயே...... கருமாரியம்மா... முத்துமாரி தாயே...... ஒங் கோயிலுக்கு வந்து ஒன்னயே கதின்னு கெடக்கிற என்ன ஏறெடுத்து பாக்க மாட்டியா....... நா படுற கஷ்டமெல்லாம் ஒன் கண்ணுக்கு விடியற காலம் எப்போம்மா?............

ஐயர் :- (பின்னணி)

ஓம் ஆதார சக்தியே நமக

ஓம் அன்னதாயே நமக

ஓம் மகாசக்தியே நமக

ஓம் பிறப்ப வர்த்தினியே நமக

இசை :- ஈசன் கனராகம ஹஹாஹா

பாரதியார் :- (மேடைக்கு வரல், பூமாரி பொழிதல், அம்மன் சிலை விலங்குகளால் கட்டப்பட்டுள்ளதைக் காணல், ஆத்திரமடைந்த பாரதி மேடையில் கோபாவேசத்துடன் ஆடல்.)

பின்னணி :- தாம்தரிகிட, தாம்தரிகிட, தாம்தரிகிட தாம்

திக்குகள் எட்டும் சிதறி - தக்கத்

தீம்தரிகிட, தீம்தரிகிட, தீம்தரிகிட தீம்தரிகிட

பக்க மலைகள் உடைந்து - வெள்ளம்

பாயுது பாயுது தாம்தரிகிட தாம்தரிகிட

தக்கத் ததுங்கிட தித்தோம் - அண்டம்

சாயுது சாயுது பேய் கொண்டு தாம்தரிகிட

தக்கை யடிக்குது காற்று - தக்கத்

தாம்தரிகிட, தாம்தரிகிட, தாம்தரிகிட, தாம்தரிக்கிட

வெட்டியடிக்குது, மின்னல் - கடல்

வீரத்திரை கொண்டு விண்ணை யிடிக்குது

வெட்டியிடிக்குது மேகம், கூ.................

கூவென்று விண்ணைக்குடையுது காற்று

சட்டச்சட சட்டச்சட டட்டா - என்று

தாளங்கள் கொட்டி கனைக்குது வானம்.

ஆட்டம் மெதுவாகக் குறைதல் பாரதியின் கோபம்
குறைந்து அம்மனைப் பரிதாபத்துடன் பார்த்தல்

பாரதி :- ''தேடியுனைச் சரணடைந்தேன் தேசமுத்து மாரி
கேடதனை நீக்கிடுவாய் கேட்டவரம் தருவாய்
பாடியுனைச் சரணடைந்தேன் பாசமெல்லாம் களைவாய்
கோடி நலஞ் செய்திடுவாய் குறைகளெல்லாம் தீர்ப்பாய்
வீதிறற் சாமுண்டி, காளி, எங்கள் மக்கள்
மனங்களெல்லாம் நிறைந்த தேவி சலசலக்கும் நீரோடை
அருகில் சஞ்சரிக்கும் மாரி, விண்ணை முட்டும் மலை முகடுகளில்
தவழ்ந்துவரும் தேவி, பசுமை தேயிலைகள்
உன் கரத்தால் பளபளக்கும்
காடாய் கிடந்த இந்த மேடுகளை, உன் சக்தி திறத்தால் அழித்து,
பச்சை பசிய தேயிலையாய்
ஆக்கி விட்ட கருமாரி - உந்தன் புகழ்
கீர்த்தியெல்லாம் - இவ்வுலக வெளியிடை ஓங்கி நிற்குதம்மா!
காண்பவர் நெஞ்சத்தில் - உன் கரத்தின்
உயர்வுகளால் - நடுக்கம் தோன்றுமம்மா
உன்னை வெல்ல இவ்வுலகில் சக்தியுண்டோ
எப்படை தோற்கினும் உன் படை வெல்லுமோ?
உனக்கா இந்தக்கதி........
என் தேவிக்கா இந்தக்கதி
ஓங்கி உரத்துக் கூவும், உன் வாய்கள்
இன்று ஏன் மௌனமாகி விட்டன.......
உலகத்தையே ஆட்டிப்படைக்கும் கரங்கள்
வலிமை இழந்ததென்ன?..........
எத்தனை கரங்கள் உந்தன் திருமேனிதனில்
இன்று அவைகள் எங்கே போயின?....
உந்தன் உயர் கரங்களுக்கு எங்கிருந்து
வந்தது விலங்கு......... எவன் இட்டது விலங்கு
உந்தன் வாய்கள் எவ்வாறு மௌனமாயின......
விலங்குகள் உடையாதா............?
மௌனம் கலையாதா.............?

பாலாஜி :- ஐயா, மகா சக்தி மாதிரி மாரியின் கையிக்கு, யார் வெலங்கு
போட்டதுன்னு யோசிக்கிறீங்களா...?
ஒண்ணு, ரெண்டா, ஒருத்தனா, ரெண்டுபேரா, ஒவ்வொரு
சென்மமா எடுத்தாலும் அத ஒடைக்க ஏலுமா.....?

சந்தர்ப்பவாதி :- வெலங்கா, அப்படீன்னா என்னா?............ வெலங்காவது ஒண்ணாவது.......... அவங்க சங்கிலி போட்டிருங்காங்க................ தங்கத்தில போட வழியில்லை......... அதனாலதான்...........இரும்புல போட்டிருக்காங்க, அதுக்குப் போயி இந்த குதி குதிச்சா...... நம்ம ஐயா காதுல கேட்டா, கோவிச்சுக்கு வாரு........... ம்........... சொல்லிப்புட்டேன்.........

பாலாஜி :- வாங்கய்யா பேசிக்கிட்டே போகலாம்...... எங்க சக்தி மாரிக்கு எவன் வெலங்கு போட்டதுன்னு ஒங்க கண்ணாலேயே பார்க்கலாம்...........

பாரதி :- அப்படியே ஆகட்டும் வாருங்கள் போகலாம்...........

பாரதி, பாலாஜி, சந்தர்ப்பவாதி நடந்து செல்லல்

பாடல் குரல் கேட்டு.......... உறைநிலை அடைதல்...........

பாடல் பின்னணியில் ஒலிக்க, பிச்சைக்காரி மேடைக்குவரல்

பாடல் பின்னணியில் :-

நெஞ்சு பொறுக்குதில்லையே...............

நெஞ்சு பொறுக்குதில்லையே

இந்த - நிலை கெட்ட மனிதரை நினைந்து விட்டால் ............
நெஞ்சு பொறுக்குதில்லையே..............

கஞ்சி குடிப்பதற்கில்லார் - அதன்

காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்.......

பஞ்சமோ பஞ்சம் என்றே - நிதம்

பரிதவித்தே உயிர் துடிதுடித்தே........

துஞ்சி மடிகின்றாரே......... இவர்

துயர்களைத் தீர்க்கவோர் .............
வழியில்லையே.............

நெஞ்சு பொறுக்கு தில்லையே..........

பிச்சைக்காரி சோர்வடைதல்............ வழியில் கணேசன் வரல்

கணேசன் :- அம்மா........... கொஞ்ச நில்லுங்க............... நீங்க............. உச்சிமலை பரட்டையன் பொஞ்சாதி இல்ல............... என்னதெரியல? என்ன தெரியல?..............

பிச்சைக்காரி :- தம்பி........... யாருப்பா நீ? எனக்கு கண்ணும் தெரியல.............. காதும் கேட்கல பசிவேற வயித்த கிள்ளுது............. ஒடம்பு சோர்ந்து போச்சுப்பா.......... யாருப்பா நீ......... இவ்வளவு அக்கறையா கேட்க கூட நாதி இருக்குன்னு நெனைக்க சந்தோஷமா இருக்கப்பா...........

கணேசன் :- நாந்தாங்க........ உச்சிமலை மேக்கணக்கு கணேசன்........ ஒத்தலயம் தாண்டவவுட்டு மகன் ............. ஞாபகம் இல்லீங்களா..............?

பிச்சைக்காரி :- அட நீ............. தாண்டவவுட்டு மகனாப்பா......... நல்லா யிருக்கியா........... ஒங்கப்பன் ஆயியெல்லாம் நல்லா யிருக்காகளா.........?

கணேசன் :- அப்பா செத்து போயிருச்சி........... ஆயிமட்டுந் தான் என்னோட இருக்கு...........

பிச்சைக்காரி :- ச்.......ச்.......ச் நல்ல மனிசனெல்லாம் ரொம்ப நாளைக்கு உசிரோட இருக்கிற தில்லப்பா....?

கணேசன் :- சரி அதவுடுங்க........ நீங்க..... இந்தக்.. கதிக்கு எப்டி வந்தீங்க......... உங்கள இந்த நெலமையில பார்க்க எவ்வளவு கஷ்டமா இருக்குங்க........ என்னமா இருந்த குடும்பம்...

பிச்சைக்காரி :- அட, அத ஏம்பா கேக்குற.......... ஒனக்குத் தெரியுந்தானே........... என் புருஷன் செத்து போனப்புறம்...... நான்........ இந்தியா பாஸ்போர்ட்காரின்னு........... உச்சிமலை தோட்டத்தொர பிரவுடன்பண்டு......... அது இதுன்னு குடுத்து தோட்டத்தவுட்டு என்ன குடும்பத்தோட அனுப்பிட்டான்.....

கணேசன் :- அதான் தெரியுமே....... நீங்க கண்டி பக்கம் ஏதோ தோட்டத்தில ஆளுக எடுக்கிறாங்கன்னு போனீங்களே.........

பிச்சைக்காரி :- ஆமாப்பா...... அங்கபோனா.... அந்த தோட்டத்தில ஒருநா............ ரெண்டு நா தான் வேல..... அந்த சம்பளம் எந்த மூலைக்கி! கையில இருந்த காசெல்லாம் செலவழிஞ்சு போச்சா....

ஒரு வருஷத்துக்கு முந்தி... தோட்டத்தில பேர் பதியிரத்துக்கு........ ஆளு நெறைய இருக்கு.... அதோட காம்ரா பிரச்சனை வேற இருக்குன்னு சொல்லி இந்தியா சிட்டிசன் காரங்களை யெல்லாம்..... வெளிய போட்டுட்டாங்க.....

கணேசன் :- ஆமாங்க நம்ம தோட்டக்காட்டுல இது பெரிய பிரச்சினையாத்தான் இருக்கு. இந்தியா சிட்டிசன் காரங்கள காரணம் காட்டியே ஆளுகள பேர் பதியிராங்க இல்ல. காம்பரா கொடுக்கிறாங்க இல்ல.... நாய் மாரி காலமெல்லாம் ஒழைக்கிறோம். நமக்குன்னு எதுவுமே இல்ல..... நாட்டுல இருந்து வந்து டெம்பரி வேலை செய்றவனுக எல்லாம், என்னா சொகுசா இருக்கிறானுக..... அத வுடுங்க........ இதுக்கு நம்மதோட்ட தலவருமாறு ஒண்ணும் செய்யலியா.......

பிச்சைக்காரி :- தலைவருமாருந்தான் கஷ்டப்பட்டாக. ஒண்ணும் சரிவரல்ல.... தோட்டந் தோட்டமா அலைஞ்சோம்........ ஒரு தோட்டத்திலேயும் ஆளு எடுக்கிறாங்க இல்ல... எத்தினை நாளக்கித் தான் சொந்த காரங்க வூட்டுல இருக்கிறது.

பாரதி :- (உறைநிலையிலிருந்து விடுபட்டு)

ஆ.............. என்ன கொடுமை......... என்ன கொடுமை

உழைப்பவனுக்கே உலகம் சொந்தம்....

ஆனால், இங்கு உழைத்தவன் கால் வயிறு

கழுவ முடியாமல் தவிப்பதா.............?

பாலாஜி :- பார்த்தீங்களா ஐயா...... எம் மலையக மாதாவின் வெலங்குகள்ள ஒண்ணு வறுமைங்க....... நாங்க ஒழைக்கிற தெல்லாம் - சுரண்டி உண்டு கொளுக்கிற கூட்டம்..... எம்மை அடிமையாக்கிட்டுது..... நாங்க பரம்பரையா ஒழைச்ச இந்த பூமி

எங்களுக்கு இல்லையாம்.... முன்ன பின்ன தெரியாத இந்தியா எங்க ஊராம்..... நல்ல நாயம் ஐயா இது........!

ஒழைச்சி களைச்ச உடம்பு ஓய்வா இருந்து சாப்பிடற காலத்தில........ ரோட்டுரோட்டா அலைஞ்சி சாப்பிட வேண்டிய நிலை........ இது நா.......... வேற எங்கயும் கேள்விப்படலய்யா!

பாரதி :- இனி ஒரு விதிசெய்வோம் - அதை

எந்நாளும் காப்போம்

தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்

ஜெகத்தினை அழித்திடுவோம்.

கோஷம் :- ஜகத்தினை அழித்திடுவோம்...........

சுப்பிரமணியம் :- அ........ சிரிசேன ஐயாவா, வாங்க வாங்க.. என்னா இவ்வளவு தூரம்?

சிரிசேன :- ஆ............ சுப்பிரமணி ஒங்கல பார்க்கிறத்துக்குதான் நாங் இங்க வந்தது. ஒங்களுக்கு கஷ்டம் வந்தது தானே..... நீங்க ஒங்க வூட்டுக்கு முன்னுக்கு - காம்பரா அடிச்சது தானே.... அத அந்த வோட்சர் - தொரக்கு பந்தம் புடிச்சது தானே........ தொரக்கி கோவம் தானே, அதாங் .......... ஒங்களுக்கும் ஒங்க சம்சாரத்துக்கும் வேலை நிப்பாட்டியாச்சு தானே..........

சுப்பிரமணியம் :- ஐயோ சிரிசேன........... நான் காம்பரா பத்தாமதானே காம்பரா அடிச்சேன்... இப்ப வேலை நிப்பாட்டியாச்சினா நான் என்னா செய்வேன்? ஏது செய்வேன்......

இரண்டு பேரு வேலை செஞ்சே சமாளிக்க முடியாம............ ஈரத்துணிய இடுப்பில சுத்திக்கிட்டு இருக்கேன்......... இதுல வேற இரண்டு பேருக்கும் வேலை நிப்பாட்டுனா......... நான் என்னா பண்ணுவேன் சிரிசேன ஐயா...... நீங்கதான் ஏதாவது பார்த்து செய்யணும்.

சிரிசேன :- சரி........ சரி அழுவ வேணாங்............ ஒங்களுக்கு ஒரு கர்ச்சன்னா நாங்க பாத்துக்கிட்டு இருக்க ஏலாது தானே...... இன்னிக்கு ஒங்களுக்கு நாளைக்கு நம்பளுக்கு தானே..... தொழிலாளிக்கு வார கஷ்டமுன்னா நம்ம எல்லாத்துக்குந் தானே........

சுப்பிரமணியம் :- சிரிசேன ஐயா, ரெண்டு மூணு கொமரு புள்ளைகளை வைச்சிக்கிட்டு நான் அந்த லயக் காம்பராவிலே இருக்க ஏலுமா.......? நீங்களே சொல்லுங்க! அதனால தானே காம்பரா அடிச்சேன்........... தேயிலை கண்ணை புடுங்கிட்டா அடிச்சேன், என் மரக்கறி தோட்டத்திலே அடிச்சேன்.. அவன் அவன் எல்லாம் பட்டி கட்டிக்கிறான்........ நான் ஒரு காம்பரா அடிக்கக் கூடாதா?

சிரிசேன :- அது எனக்கு வெலங்குந் தானே...... நம்ம ஆளுக.. எத்தனை வருஷமா இந்த ஒழுகிற லயத்தில இருக்கிறது. நம்மலோட தானே அந்த வோட்சரும் இருக்கிறது..... அவரு போயி தொரக்கிட்ட சொல்லலாமா.........?

| | | |
|---|---|---|
| சுப்பிரமணியம் | :- | இப்ப என்னா செய்யறது சிரிசேன ஐயா, எனக்கு கையும் ஓடல காலும் ஓடல. |
| சிரிசேன | :- | நம்ம நேரா போவம் - நம்ம யூனியன் பிரதிநிதி கிட்ட......... போயி வெவரமா சொல்லுவோம்......... அவரு நமக்கு நல்ல முடிவு சொல்லுவாருதானே...? |
| சுப்பிரமணியம் | :- | அப்ப வாங்க இப்பவே போவோம் |
| சிரிசேன | :- | அதோ...... நம்ம பிரதிநிதி வாரது தானே! |
| சுப்பிரமணியம் | :- | வாங்க சேர் வாங்க சேர்....... கும்புட போன தெய்வம் குறுக்க வந்தமாதிரி... நீங்களே வாறீங்க. ஒங்களத்தானே நாங்க பார்க்க வந்துக்கிட்டு இருக்கிறோம். |
| பிரதிநிதி | :- | என்னா விஷேசம் ஏதாவது கரச்சலா.... கரச்சல் இல்லாட்டி நம்மள பார்க்க மாட்டிங்களே. ஏதாவது பிரச்சனைன்னா ஒடி வருவீங்க...... இல்லாட்டி திரும்பிக் கூட பார்க்க மாட்டீங்க....... |
| சிரிசேன | :- | சேர்........ நம்ம சுப்பிரமணிக்கும் அவுங்க சம்சாரத்திற்கும் வேலை நிப்பாட்டியாச்சுதானே! |
| சுப்பிரமணியம் | :- | புள்ளகுட்டிக்காரன் நான், எனக்கு வேலை நிப்பாட்டீட்டாங்க சேர்... என்ன பண்றதுனே..... புரியல..... |
| பிரதிநிதி | :- | ஏன் சுப்பிரமணி ஒங்களுக்கு வேலை நிப்பாட்டியாச்சு? தைரியமாக சொல்லுங்க நாங்க இருக்கோம் தானே, ஒங்க பிரச்சினைகளைத்தீர்க்க தானே நாங்க இருக்கிறோம் சொல்லுங்க........ |
| சிரிசேன | :- | சுப்பிரமணி காம்பரா பத்தாம அவங்க தோட்டத்தில ஒரு காம்பரா அடிச்சாச்சு........அதுதான் தொர வேலை நிப்பாட்டியாச்சு..... |
| பிரதிநிதி | :- | எவ்வளவு தூரத்தில காம்பரா அடிச்சிருக்கீங்க? |
| சுப்பிரமணியம் | :- | 60 அடிக்கு அங்கிட்டு தாங்க அடிச்சிருக்கேன் |
| பிரதிநிதி | :- | அது என்ன காம்ரா.... பட்டியா......? குசினியா? |
| சுப்பிரமணியம் | :- | குசினிங்க....... |
| பிரதிநிதி | :- | தொரகிட்ட கேக்காமலா அடிச்சிங்க.... |
| சுப்பிரமணியம் | :- | ஆமாங்க......... காம்ப்ரா தர சொல்லி பத்து பதினைந்து தரம் தொரகிட்ட கேட்டேனுங்க........ அவரு சாக்கு போக்கு சொல்லிக்கிட்டு இருக்கிறாருங்க....... காம்ப்ரா ஒண்ணு அடிச்சேனுங்க |
| பிரதிநிதி | :- | அது பெழை தானே..... நீங்க தொரக்கிட்ட கேட்டல அடிச்சிருக்கணும். |
| | | சரி...சரி........ நானும் ஒங்க தொரய சந்திக்க போறேன், வாங்க போயி கேட்போம். எங்க ஒங்க தலைவரு........? |
| சிரிசேன | :- | அவரு தோட்டம் போயிட்டது தானே |



சுப்பிரமணியம் :- அதோ பாருங்க தொர வந்துகிட்டு இருக்காரு

பிரதிநிதி :- சரி........சரி நீங்க இங்கயே நில்லுங்க நான் கதைச்சிட்டு வாரேன்

பிரதிநிதி :- குட் மோர்னிங் சேர்

துரை :- குட் மோர்னிங் ......... அப்புறம் எப்படி?

பிரதிநிதி :- நமக்கென்னாங்க....... ஆமா நீங்க எப்படி சேர்....... தோட்டமெல்லாம் எப்படி போகுது?

துரை :- தோட்டத்துக்கென்ன நல்லாத்தான் இருக்கு....... ஒங்க ஆளுக தான் ஒரே கரச்சல்..... நீங்க நமக்கும் நல்லா கதைக்கிறது ஒங்க ஆளுங்களுக்கும் ஏத்தி விடுறது....

பிரதிநிதி :- என்னாங்க சேர் செய்யறது? நம்ம தொழில் அப்படி

துரை :- சரி என்னா விஷேசம் இந்த பக்கம் வாரீங்க......

பிரதிநிதி :- சும்மா ஒங்கள பார்க்க வந்தேன் சேர். வார வழியில ஒரு பிரச்சினை. ஏதோ சுப்பிரமணியத்துக்கும், அவங்க சம்சாரத்துக்கும் வேலை நிப்பாடிட்டீங்களாம்.

துரை :- ஆமா ஆமா... ஏன் அவரு சொல்லலையா....?

பிரதிநிதி :- சொன்னாருதான் சேர்.... 60அடிக்கு அங்கிட்டு வீடு கட்டலாம்ன்னு சட்டம் இருக்குத்தானே காம்பரா பத்தாமதான் சேர்..... வீடு அடிச்சி இருக்கிறாங்க......

துரை :- சட்டம் இருக்குத்தான்.... ஆனா தோட்டத்தில மத்த ஆளுங்களுக்கு இடைஞ்சல் தானே... இன்னிக்கு சுப்பிரமணி கட்டும் .... நாளைக்கு தோட்டத்தில ஒவ்வொரு ஆளும் கட்டத் தொடங்கினா... தோட்டம் என்னா ஆகிறது? எட பிரச்சினை வேற. தோட்டத்துல உள்ள மரமெல்லாம் வெட்டுவானுங்க. தகரம் களவெடுப்பானுங்க... இப்படியே விட்டுட்டா தோட்டம் நட்டமா இல்ல போகும்.

அடைதல்) சந்தர்ப்பவாதி, கங்காணி மேடைக்கு வரல்..........

கங்காணி :- ஆ........... மணி 7 ஆச்சி..... ஒரு பயல இன்னும் வேலைக்கு காணோம்.......... கூத காலம் இறுக்கி போத்திக்கிட்டு தூங்குறானுக......... என்ன செய்யறது.......... அவங்களும் பாவம்தான் கொஞ்சமா வேலை செய்றானுங்க.......... வேலை செஞ்ச அலுப்பு.........அடிச்சி போட்டமாரி தூக்கம் வரும்........ பாவந்தான்.......

என்னா இருந்தாலும் டுட்டியில ஒழுங்கா இருக்கணும் இல்ல..... கரக்ட் டயமுக்கு வேலைக்கு வரவேணும்..... ஆ....... வர்ராங்க.... வர்ராங்க.........

ஆ..... வாங்க........ வாங்க........ வாரது லேட்டு அதுல வேற அன்ன நடை........

ஆ............தொங்க நெர.......... நெரைக்கு சண்ட போடுறியா?......... மலையவுட்டு தொரத்திடுவேன் கவனம்......... சொல்லிப் புட்டேன்....... முத்த எல புடுங்க வேணும்......... காதுமுடிச்சி புடுங்க வேணும்.

கணக்குப்புள்ள தொரமாரு கிட்ட நமக்கு நல்ல பேரே கெடைக்காது. இன்னக்கி இரண்டரை மணி வரைக்கும் டிம்மி கட்டணும்.

தெய்வானை :- என்னாங்க பண்றது..... வெயிலு கொளுத்தோ கொளுத்தோன்னு கொளுத்து.......... கொழுந்து காடா இது....... பழைய மலையில கொழுந்தா இருக்கும்..... எவ்வளவுதான் வேலை செஞ்சாலும் கூட, கூட ரொம்பாது...

ச. வாதி :- ஆமா..... இப்படியே வாயடிச்சிக்கிட்டு, கூட மட்டுமா ரொம்பும்.... வாயில வருது....

ராமசாமி :- அட நீ ஒரு பக்கம்...... நாம படுற கஷ்டம் இவுகளுக்கு எங்க தெரியப் போவுது..... அரை வயிறும் காவயிறுமா........ என்னா கஷ்டம் படுறோம்....... ஆயிரம் பிரச்சினை, அதுல இதுவும் ஒண்ணு........ ஏ கந்தன், ஒனக்கு சேதி தெரியுமா?

கந்தன் :- என்னா ராமசாமி, விஷேசம்.....

ராமசாமி :- அது.......... நம்ம தோட்டத்திலே 16ம் நம்பர் மலையையும் 18ம் நம்பர் மலையையும் எடுத்து கொலனியாக்கப் போறாங்களா முல்ல.....

கந்தன் :- அட அப்டியா சேதி.......... இப்படித்தான்.... முன்ன டெவன் தோட்டத்தில காணி எடுக்க போயி வாங்கி கட்டுனாங்க.. அது மட்டுமா? இன்னும் எத்தனையோ தோட்டத்தில காணி எடுத்து முடியாம போயிட்டாங்க.....

ராமசாமி :- அட என்னப்பா அப்படி சொல்ற? றாகல, கண்டி, நாவலப்பிட்டி பக்கமெல்லாம் காணி எடுத்து கொலனியாக்கி, இப்ப அவுக தானே இருக்காங்க......

கந்தன் :- இது நம்ம தோட்டத்தில அனுமதிக்க முடியாது அண்ணே.... இது நம்ம பூமி! நம்ம உழைச்சு உருவாக்குன நிலம் இது.... இதுதான் நம்ம தாயி. தாய் நாட்ட விட்டுக்குடுக்க முடியுமா என்ன......?

அடைதல்) சந்தர்ப்பவாதி, கங்காணி மேடைக்கு வரல்...........

கங்காணி :- ஆ............ மணி 7 ஆச்சி..... ஒரு பயல இன்னும் வேலைக்கு காணோம்........... கூத காலம் இறுக்கி போத்திக்கிட்டு தூங்குறானுக......... என்ன செய்யறது.......... அவங்களும் பாவம்தான் கொஞ்சமா வேலை செய்றானுங்க.......... வேலை செஞ்ச அலுப்பு.........அடிச்சி போட்டமாரி தூக்கம் வரும்........ பாவந்தான்.......

என்னா இருந்தாலும் டூட்டியில ஒழுங்கா இருக்கணும் இல்ல..... கரக்ட் டயமுக்கு வேலைக்கு வரவேணும்..... ஆ....... வர்ராங்க.... வர்ராங்க.........

ஆ..... வாங்க........ வாங்க........ வாரது லேட்டு அதுல வேற அன்ன நடை........

ஆ............தொங்க நெர........... நெரைக்கு சண்ட போடுறியா?.......... மலையவுட்டு தொரத்திடுவேன் கவனம்......... சொல்லிப் புட்டேன்....... முத்த எல புடுங்க வேணும்......... காதுமுடிச்சி புடுங்க வேணும்.

கணக்குப்புள்ள தொரமாரு கிட்ட நமக்கு நல்ல பேரே கெடைக்காது. இன்னக்கி இரண்டரை மணி வரைக்கும் டிம்மி கட்டணும்.

தெய்வானை :- என்னாங்க பண்றது..... வெயிலு கொளுத்தோ கொளுத்தோன்னு கொளுத்து.......... கொழுந்து காடா இது....... பழைய மலையில கொழுந்தா இருக்கும்..... எவ்வளவுதான் வேலை செஞ்சாலும் கூட, கூட ரொம்பாது...

ச. வாதி :- ஆமா..... இப்படியே வாயடிச்சிக்கிட்டு, கூட மட்டுமா ரொம்பும்.... வாயில வருது....

ராமசாமி :- அட நீ ஒரு பக்கம்...... நாம படுற கஷ்டம் இவுகளுக்கு எங்க தெரியப் போவுது..... அரை வயிறும் காவயிறுமா........ என்னா கஷ்டம் படுறோம்....... ஆயிரம் பிரச்சினை, அதுல இதுவும் ஒண்ணு........ ஏ கந்தன், ஒனக்கு சேதி தெரியுமா?

கந்தன் :- என்னா ராமசாமி, விஷேசம்.....

ராமசாமி :- அது........... நம்ம தோட்டத்திலே 16ம் நம்பர் மலையையும் 18ம் நம்பர் மலையையும் எடுத்து கொலனியாக்கப் போறாங்களா முல்ல.....

கந்தன் :- அட அப்டியா சேதி........... இப்படித்தான்.... முன்ன டெவன் தோட்டத்தில காணி எடுக்க போயி வாங்கி கட்டுனாங்க.. அது மட்டுமா? இன்னும் எத்தனையோ தோட்டத்தில காணி எடுத்து முடியாம போயிட்டாங்க.....

ராமசாமி :- அட என்னப்பா அப்படி சொல்ற? றாகல, கண்டி, நாவலப்பிட்டி பக்கமெல்லாம் காணி எடுத்து கொலனியாக்கி, இப்ப அவுக தானே இருக்காங்க......

கந்தன் :- இது நம்ம தோட்டத்தில அனுமதிக்க முடியாது அண்ணே.... இது நம்ம பூமி! நம்ம உழைச்சு உருவாக்குன நிலம் இது.... இதுதான் நம்ம தாயி. தாய் நாட்ட விட்டுக்குடுக்க முடியுமா என்ன......?

ராமசாமி :- ஏ......... அதுமட்டுமா? இந்தியா சிட்டிசன் காரங்களையெல்லாம் கப்பல் போட்ட ஒடன..... கப்பல் ஏத்தி இந்தியாவுக்கு அனுப்பப் போறாகலாமுல்ல.

கந்தன் :- என்னா அநியாயம், அப்ப இது........ பிரவுடன் பண்டு...........அது இதுன்னா எல்லாத்தையும் முடிச்சுபுட்டு........ கையில ஒத்த சதம் காசில்லாம டெம்பரரி வேலை தானே செய்யுது நம்ம ஆளுக.

ராமசாமி :- தோட்டத்திலேயும் பேரு பதியாம இலங்க சிட்டிசன் காரங்க நெறைய பேரு இருக்காங்க........... காம்பரா வேற பெரிய பிரச்சினையா இருக்கு............ தொரக்கிட்ட கேட்டா, அவன் சொல்றான்னா இந்தியா காரங்க எல்லாம் போவட்டும் அப்புறந்தான் பேரு பதிய முடியும். காம்பரா தர முடியுங்கிறான்...... ஏன்னா தோட்டம் நட்டத்துல இல்ல போகுதாம்.

கந்தன் :- ஆமா, தோட்டம் நட்டத்தில போகுது. அவன் அவன்...... தோட்டகாட்டு சொத்தை எல்லாம் சுருட்டிக்கிறான்......... அப்புறம் எப்டி, தோட்டம் உருப்படியாவா இருக்கும்? தோட்டம் நட்டத்தில போகுது நம்மாளுகள் பேருபதிய முடியாது - அப்ப எப்டி நாட்டுல உள்ளவங்கள தோட்டத்து வேலைக்கு எடுக்கிறாங்க........ ம்..... கேட்கிறேன்.

சந்தர்ப்பவாதி :- அட........அட... என்னடா சும்மா வளவளன்னு கதைச்சிக்கிட்டு இருக்கீங்க..... அவன் காணி அவன் எடுத்துக்கிறான்.... நாம இந்தியாக்காரங்க தானே............ இதுன்னா நம்ம ஊரா நமக்கு வேலை போட்டு தாரத்துக்கு........... ஏய்யா சும்மா கரச்ச குடுத்து ஊர கொலப்பிறீங்க.........

நம்ம ஐயா கேட்டாருன்னா...... கோவிச்சுக்கிடுவாரு...... அப்புறம் ஒங்க தலையெழுத்து....... ம்......... சொல்றது சொல்லிப்புட்டேன்.....

கந்தன் :- அட போய்யா............ புடிக்கிற பரதேசி.........

ராமசாமி :- ம்........... எத்தினி நாளைக்குத்தான் இந்த கொடுமைகளை பொறுத்துக்கிட்டு இருக்கிறது............ சும்மாவே இருந்தா....... நம்ம தலையில கொச்சிக்கா அரைச்சிட்டு போயிறுவானுக.......... பொறுமை பொறுமையின்னு நம்ம ஆளுகள அடிமையாக் கிட்டானுங்க..........அவக நெனக்க வேண்டியது............ நம்ம தலையாட்ட வேண்டியது தான்........

கந்தன் :- அது அந்தக் காலம் அண்ணே....... இப்ப நெலம மாறிக்கிட்டு வருகிது.... எதையுமே தட்டிக்கேட்க ஆரம்பிச்சிட்டோம் நாங்க.

அடக்கு முறை வருதல்

பின்னணி :- தா சொனங்கிட தகிங்கு தத்தமி.......

தொண்டு செய்யும் அடிமை - உனக்கு

சுதந்திர நினைவாடா பண்டு கண்ட துண்டோ - அதற்குப்

பாத்திர மாவாயோ.

ஜாதிச் சண்டை போச்சோ - உங்கள்

சமயச் சண்டை போச்சோ

நீதி சொல்ல வந்தாய் - கண்முன்
நிற் கொனாது போடா
அச்சம் நீங்கினாயோ - அடிமை
ஆண்மை தாங்கினாயோ
பிச்சை வாங்கிப் பிழைக்கும் - ஆசை
பேணுதல் ஒழித்தாயோ.

கப்பலேறுவாயோ - அடிமை
கடலைத் தாண்டு வாயோ
குப்பை விரும்பும் நாய்க்கே - அடிமை
கொற்றத் தவிசு முண்டோ.

நாடு காப்பதற்கே - உனக்கு
ஞானம் சிறிது முண்டோ
வீடு காக்கப் போடா - அடிமை
வேலை செய்யப் போடா
தா தொணங்கிட தகிங்கு தத்தமி

மேடையில் ஆடிக் கொண்டிருக்க பின்னணியில்........ ஒட்டுண்ணி பேசுதல்.......

ஒட்டுண்ணி :- தொழிலாளர் தோழர்களே.......

உங்கள் பக்கம் நாங்கள் இருக்கின்றோம். எத்தகைய அடக்குமுறை வந்தாலும், அதனை முறியடிக்க எங்களிடம் சக்தியுண்டு..... நீங்கள் போராட வேண்டியதில்லை...... உங்களுக்காக நாங்கள் போராடு கின்றோம்.

சந்தர்ப்பவாதி :- டேய் கைதட்டுங்கடா........ ஐயா சொல்றது வாஸ்தவம்

ஒட்டுண்ணி :- உங்களுக்காக நாங்கள் பேசினோம்.. பேசிக்கொண்டிருக்கிறோம்..... பேசுவோம்..........

சந்தர்ப்பவாதி :- சரிதாங்க......... சரிதாங்க..........

ஒட்டுண்ணி :- நீங்கள் உழையுங்கள்.......... நீங்கள்
உழையுங்கள்......... நாங்கள் பேசுவோம்
நாங்கள் பேசுவோம்.......
ஆயிரமாயிரம் பிரச்சினைகளை உங்கள் தலையில
சுமக்கின்றீர்கள்..... சுமை தாங்காது....... இறக்கி வையுங்கள்.
நாங்கள் இறக்கி வைப்போம்..........

நீங்கள் உழையுங்கள்........... நாங்கள் போராடுவோம்....... நீங்கள் உழையுங்கள்......... நாங்கள் பேசுவோம்........ நாங்கள் பேசுவோம்...!

பாரதி :- பொய்........ பொய்..... பொய்......... நீ ஏன் ஒரு வாயில் பேசுகிறாய்? இங்கே ஆயிரமாயிரம் வாய்கள் உண்டு, அவற்றைப் பேசவிடு... ஒவ்வொரு வாயும் பேசத்தான் இருக்கின்றன..... அவற்றைப் பேச விடு........... மலைகளைப்........ பேசவிடு......

சந்தர்ப்பவாதி :- ஆமாங்க.... ஆமாங்க........... நான் நெனச்சத பேசினதே இல்லங்க........ எங்க பேசவுட்டானுங்க?.......... இவுங்க செஞ்ச அநியாயத்தை எல்லாம்........ இந்தக் கண்ணுல பார்த்து இந்தக் காதால.. கேட்டு ......... கேட்டு அலுத்துப் போச்சுங்க....... உண்மை என் காதுல ஏறுறதே இல்ல........... பொய்தான் இந்தக் காதுக்கு இனிக்கும்...... பொய்யத் தான் இந்தக் கண்ணு பார்க்குது.

இனிமேயாவது உண்மையைக் கேட்போம்......... உண்மையைப் பேசுவோம்... உண்மையைக் செய்வோம்.... உண்மைக்காக வாழ்வோம்......

ஐயா காதில வுழுந்தா கோவிச்சுக்குவாருன்னு எத்தினி நாளக்கித்தான் ஐயாவ பார்த்துக்கிட்டு சும்மா இருக்கிறது........... அவருந்தான் எனக்கு என்னத்த செஞ்சி கிழிச்சாரு........

பாலாஜி :- சொந்தச் சகோதரர்கள்....

துன்பத்தில் சாதல் கண்டும்...

சிந்தை இரங்காரடீ.. கிளியே

செம்மை மறந்தாரடி.........

பாரதி :- தாயே......... தாயே........ மாரி தாயே..............

காலம் காலமாய் உழைத்து, களைத்து இன்று ஓடாய் ஆகிவிட்டாய்........ குமுறும்.... எரிமலைகளை உன் இதயத்துள் போட்டு பூட்டி வைத்தாய். உன் வாய்கள் ஏன் மௌனமாகின என விளங்கிக் கொண்டேன்..... உன்னால் பேச முடியாது...... உன் வாய்களை அரக்கர்கள் இன்று மூடிவிட்டார்.

உன்னால் நிமிர முடியவில்லை.... உன்னில் பலர் ஏறி உன் தலையில் ஓங்கி ஓங்கி சம்மட்டியால் அடித்துக் கொண்டே இருக்கின்றார்.......... நீ நிமிர முடியாது......... புரிந்து கொண்டேன்.... புரிந்து கொண்டேன்......

உன் கரங்கள் உயராது......... உன்னை ஒடுக்கி உன் கரங்கள் ஆயிரத்திலும்............. விலங்குகளைப் போட்டு விட்டார்......... உன் கரத்தை அசைக்க முடியாது...........

வறுமை.......... அறிவின்மை...... மூடநம்பிக்கை........ அடக்குமுறை இங்கு கோரத் தாண்டவமாடுகின்றன....

பாரதி :- நிலத்தை ஆக்கிரமித்தார்....... உன் உழைப்பைச் சுரண்டிய எத்தர்கள் கொளுத்து விட்டனர். உனது உரிமைகளைப் பறித்து

விட்டனர்.

உனக்கு தொழில் கிடையாது... உனது தொழில்களை அரக்கர் கூட்டம் பறித்து இன்று ஆரவாரிக்கின்றன.....

உன் மௌனம் கலையாதா?

உன் விலங்குகள் உடையாதா?

உன் கரங்கள் உயராதா?

உன் ஆட்சி நிலைக்காதா?

ஒற்றுமையாக வாழமுடியாது........

பாலாஜி : ஏன் கலையாது............

ஏன் உடையாது..........

ஏன் உயராது...........

ஏன் நிலைக்காது.........

ஏன் ஒற்றுமையாக வாழமுடியாது.......

எழுக........ எழுக......... எழுக...........

தொழிலாளர்கள் :- எழுவோம்......... எழுவோம்....... எழுவோம்.......

| மாரி :- | தொழிலாளர் :- |
|---|---|
| மலைகளே எழுக | மலைகள் நாங்கள் எழுவோம் |
| மலைகளே பேசுங்கள் | மலைகள் நாங்கள் பேசுவோம் |
| மலைகளைப் பேசவிடுங்கள் | எங்களைப் பேச விடுங்கள் |
| இப்படை தோற்கின் | எப்படை வெல்லும்........ |

மாரியம்மன் எழுதல்........ அடக்குமுறையாளன் தேவியின் காலடியில் விழல்

மாரி :- நமது விழிகளிலே மின்னல் பிறக்கும் மலைகளை பேசவிட்டால் இங்கு மாற்றம் நேர்வது திண்ணம்.

தொழிலாளர் :- திண்ணம்....... திண்ணம்.......... திண்ணம்

மாரி :- மலைகளைப் பேசவிடுங்கள்

மலைகளைப் பேசவிட்டால் மாற்றம் இங்கு நேர்வது திண்ணம்......... திண்ணம்............. திண்ணம்.......

-திரை-

நமது விழிகளிலே மின்னல் பிறந்திடுக.

நமது நெஞ்சிலே மின்னல் விசிறிப்பாய்க.

நமது கையிலே மின்னல் தோன்றுக.

நமது பாட்டு மின்னலுடையதாகுக.

நமது வாக்கு மின் போல் அடித்திடுக.

வ. செல்வராஜா

அரும்பதங்கள்

1. காம்பரா - அறை
2. ஜகம் - உலகம்
3. முத்த எல - முற்றிய இலை (வீசப்படுவதற்காக)
4. காது முடிச்சி - பூவாகும் நிலையிலுள்ள அரும்பு( தேயிலை அரும்பு முளைவிடும் பொருட்டு இதுவும் ஒடிக்கப்பட்டு வீசப்படும்.)

பயிற்சி

1. இந்நாடகம் வலியுறுத்தும் மையக்கருத்து யாது ?
2. ‘‘மலைகளைப் பேசவிடுங்கள்’’ என்பதிலிருந்து நீர் விளங்கியக் கொள்வதென்ன ?
3. இந்நாடகத்தில் உலாவும் கதாபாத்திரங்களின் குணப்பண்புகளைச் சுருக்கமாக எழுதுக.

செயற்பாடு

1. இந்நாடகத்தைக் குழுவாக நடித்துக்காட்டுங்கள்
2. இதுபோல் உங்கள் பிரதேசத்தில் நிலவும் சமூகப்பிரச்சினைகளை மையமாகக் கொண்டு நாடகங்களை ஆக்கி நடியுங்கள்.

## ஆக்கத்திறன்

## சுருக்கம்

தரம் 10ல் சுருக்கம் எழுதும் படிமுறைகள் பற்றிக் கற்றோம். அவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் பந்திகளை 20-25 சொற்களுக்கு மேற்படாது சுருக்கி எழுதுங்கள்.

1. பக்தி வழிப்பட்ட லூத்திரிய மறை ஞானத்தில் தீவிர பற்றுக் கொண்டிருந்த சஸீகன்பால்கு சிலை வணக்கத்தையும் பல தெய்வ வழிபாடுகளையும் என்றும் ஏற்றதில்லை. நடந்து சென்று கொண்டிருந்த போது எதிர்ப்பட்ட சிறு அம்மன் கோயில் ஒன்றின் வெளிப்புறம் இருந்த சிலை உருவங்களைத் தான் உடைத்து அவமதித்ததைப்பற்றி அவரே எழுதியுள்ளார். தமிழ் மக்களைச் சினேகிதர்களாகவும், கடல் போன்ற ஞானம் உடையவர்களாகவும் கருதியவரும், எள்ளளவும் காலனிய மனப்பான்மை இன்றி வாழ்ந்தவர் என ஆய்வாளர்களால் குறிப்பிடப்படுபவருமான ஸீகன்பால்கின் இச்செயலை வெறும் மதத்திமிராக (Religious Arrogance) மட்டுமே பார்த்துவிட முடியாது. எனினும் அவரது செயல் ஒரு பெரிய பிரச்சினையாக உருவெடுக்கவில்லை. உள்ளூர் மக்கள் கொதிப்படையவில்லை. பொறுமையாகவும், பெருந்தன்மையுடனும், ‘‘நீங்கள் உடைத்தவை எம் முக்கிய கடவுளரல்லர். கடவுளின் ஏவலர்களே அவர்கள்.’’ என விளக்கினர். டேனிஷ் அதிகாரத்தின் கீழ் வாழ நேர்ந்த அச்சமும் அவர்களின் இந்தப் பொறுமைக்குக் காரணமாக இருந்திருக்கலாம்.

2. தனது காலனி ஒன்றில் கிறிஸ்துவின் நற்செய்தியைப் பரப்பும் மறைப் பணியைச் செய்ய டென்மார்க் மன்னர் நாலாம் பிரெட்ரிக் திட்டமிட்டபோது அரசவைப் பாதிரி டாக்டர் லுட்டுகன்னால் தேர்வு செய்யப்பட்டவர்தான் ஸீகன்பால்கும், புளுட்சோவும். அப்போது

இவ்விரு ஜெர்மானிய இளைஞர்களும் ஹல்லே (Halle) யில், புகழ்பெற்ற லூத்தரிய மறையியலாளரும் கல்வியாளருமான ஆகஸ்ட் ஹெர்மன் ஃப்ராங் உருவாக்கியிருந்த பல்கலைக்கழகத்தில் பயின்று கொண்டிருந்தனர். தாங்கள் எங்கு செல்லப் போகிறோம் என்பதை அறியாமலே கடல் கடந்த மறைப்பணிக்குச் சம்மதம் தெரிவித்த இவ்விருவரும் டென்மார்க் அழைத்து வரப்பட்டு பாதிரிப்பட்டம் அளிக்கப்பட்டுக் கப்பல் ஏற்றப்பட்டனர். சுமார் எட்டு மாத காலப் பயணத்திற்குப் பின், 1706 ஜூலை 9இல் தரங்கம் பாடியை அடைந்தது. அவர்களை ஏற்றி வந்த ‘இளவரசி சோபியா ஹெட்விகா’ என்னும் கப்பல். தரங்கம்பாடி அன்று ஒரு டென்மார்க் காலனி ஐரோப்பாவிலிருந்து வந்து இங்கே முதலில் வணிகத்தைத் தொடங்கிய போர்த்துக்கேசியர்கள் கத்தோலிக்கக் கிறிஸ்தவத்தைச் சேர்ந்தவர்களாயினும் தொடர்ந்து இங்கே வணிக மையங்களை நிறுவிய ஐரோப்பியர்களில் பெரும்பாலோர் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவத்தைச் சார்ந்தவர்கள். டச்சுக்காரர்கள் பழவேற்காட்டிலும், சதுரங்கப் பட்டினத்திலும், நாகையிலும் தமது வணிக மையங்களை அமைத்தனர். பிரிட்டிஷ்காரர்கள் மசூலிப்பட்டினம், சென்னை, கடலூர், கல்கத்தா ஆகிய இடங்களில் மையங் கொண்டனர். பிரெஞ்சுக்காரர்கள் பாண்டிச்சேரியில் தம்மை நிறுவிக் கொண்டனர். டேனிஷ்காரர்கள் தரங்கம்பாடியிலும், கல்கத்தாவிற்கு அருகிலுள்ள சொரம்பூரிலும் தமது காலனிகளை அமைத்தனர்.

பயிற்சி

1. ஆசிரியர் வழங்கும் பந்திகளைச் சுருக்கி எழுதுங்கள்.
2. பந்தியில் கூறப்படும் மையக்கருத்து, துணைக்கருத்து என்பவற்றைக் கண்டு எழுதுங்கள்.

## மொழிவளம்

### ஒலிவேறுபாடுகள்

ரகர, றகர பேதச் சொற்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அரி | - | அரிதல் | தேரல் | - | ஆராய்தல் |
| அறி | - | அறிந்துகொள் | தேறல் | - | தேன் |
| அலரி | - | பூமரங்களில் ஒன்று | நிரை | - | வரிசை |
| அலறி | - | கதறி | நிறை | - | நிறைவு |
| இரத்தல் | - | பிச்சை எடுத்தல் | பிரை | - | உறைமோர் |
| இறத்தல் | - | சாதல் | பிறை | - | இளஞ்சந்திரன் |
| இரங்கு | - | கருணைகாட்டு | மாரன் | - | மன்மதன் |
| இறங்கு | - | கீழே இறங்கு | மாறன் | - | பாண்டிய மன்னன் |
| கரை | - | ஓரம் | செரு | - | சண்டை, போர் |
| கறை | - | மாசு, குற்றம் | செறு | - | கொல்லு, வயல் |
| கூரை | - | வீட்டுக்கூரை | | | |
| கூறை | - | திருமணப்புடவை | | | |

### னகர, ணகர பேதவிளக்கம்

| | | |
|---|---|---|
| கனம் | - | பெரியாரைக் கனம் பண்ணு. |
| கணம் | - | இறைவனே! நான் உன்னை ஒருகணமும் பிரியாதிருக்க வரந்தருவாய். |
| கனி | - | காய்கனியுண்டு நோய்பிணியகற்று. |
| கணி | - | நம் முன்னோர் நிழலைக்கொண்டு நேரங் கணித்தனர். |
| கன்னி | - | கன்னிப்பெண்ணாயிருக்கும்போதே குந்தி கர்ணனைப் பெற்றாள். |
| கண்ணி | - | குறவர் கண்ணிவைத்துப் பறவை பிடிப்பர். |
| பனி | - | வெயில்முன் பனித்துளி நில்லாது. |
| பணி | - | துரியோதனனைப் பணிக்கொடியோன் என்பர். |
| வன்மை | - | திறமையான பேச்சாளர் தங்கள் பேச்சு வன்மையால் மக்கள் மனத்தைக் கவருகின்றனர். |
| வண்மை | - | வள்ளல் பாரி வண்மையிற் சிறந்தவன். |

### பயிற்சி

பின்வரும் சோடிப்பதங்களின் பொருள் புலப்படுமாறு ஒவ்வொரு சோடியையும் ஓரே வாக்கியத்திலமைத்து எழுதுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| கன்னன் | வானம் | மனம் | கன்று |
| கண்ணன் | வாணம் | மணம் | கண்டு |
| தோன்று | என் | பாரை | பரவை |
| தோண்டு | எண் | பாறை | பறவை |
| அருகு | எரி | மரி | புரம் |
| அறுகு | எறி | மறி | புறம் |
| இரத்தல் | மாரி | கூரிய | விரை |
| இறத்தல் | மாறி | கூறிய | விறை |

## இலக்கணம்

### பகுபதம்

பின்வரும் சொற்களை அவதானிப்போம்.

வீடுகள், கனவுகள், உறவுகள், ஆடுதல், பாடுதல்,தேடுதல், உண்டான், பாடுகிறது.

இச்சொற்களைப் பிரிக்கமுடியும் பிரித்தால் பொருள் தரும்.

வீடு + கள் - வீடுகள்

கனவு + கள் - கனவுகள்

உறவு + கள் - உறவுகள்

வீடு, கனவு, உறவு என்பன பெயர்ப்பகுதிகள். இவை பொருள் தருகின்றன. கள் என்பது பன்மைவிகுதி இதுவும் பொருள் உணர்த்துகின்றது.

ஆடு + தல் - ஆடுதல்

பாடு + தல் - பாடுதல்

தேடு + தல் - தேடுதல்

இவற்றில் ஆடு, பாடு, தேடு என்பவை வினையை உணர்த்தும் பகுதி/ -தல்- என்பது தொழிற்பெயர் விகுதியாகும். இங்கும் பொருள் உணர்த்தப்படுகின்றது.

உண் + ட் + ஆன் - உண்டான்

பாடு + கிறு + அது - பாடுகிறது

மேலுள்ள, உண், பாடு என்பவை பொருள் உணர்த்தும் வினைப்பகுதிகள் ட், கிறு என்பவை காலம் உணர்த்தும் இடைநிலைகள் ஆன், அது என்பவை திணை, பால், எண், இடம் உணர்த்தும் விகுதிகள்.

ஆகவே,

இவ்வாறு பிரித்தால் பொருள் தரக் கூடிய சொற்களையே பகுபதம் என்பர். பகுபதங்களில் குறைந்த பட்சம் இரண்டு கூறுகளாவது இருக்க வேண்டும்.

மலர்கள் - மலர் + கள்

அரசன் - அரசு + அன்

பகுபதங்களின் அடிச்சொற்களை அடிப்படையாக கொண்டு

1. பெயர்ப் பகுபதம்
2. வினைப் பகுபதம்

என இருவகைப்படுத்துவர்.

பெயர்பகுபதம்

அறிஞன் - அறி + ஞ் + அன்

தாய்மார் - தாய் + மார்

தொழிலாளி - தொழில் + ஆளி

வினைப்பகுபதம்

ஓடினான் - ஓடு + இன் + ஆன்

படிக்கிறான் - படி + கிறு + ஆன்

ஓடுவான் - ஓடு + வ் + ஆன்

கற்றான் - கல் + ற் + ஆன்

இங்கு ஓடு, படி, கல் என்பது வினையை உணர்த்தும் அடியாகவுள்ளன. எனவே இவை வினைப்பகுபதங்களாகும்.

## பயிற்சி

பின்வரும் பகுபதங்களிலுள்ள பகுதிகளை இனங்கண்டு அவை பெயர்ப்பகு பதமா ? வினைப்பகுபதமா என வகைப்படுத்துங்கள்.

திருமணம், நடத்தல், வாடகை, வாகனம், படித்தல், பணக்காரன், கற்றான், புத்திசாலி, ஆசிரியர்கள், கலைஞன், வருந்து, குயில்கள்

## செயற்பாடு

மலைகளைப் பேசவிடுங்கள் என்ற நாடகத்தில் கையாளப்பட்டுள்ள பகாப்பதங்கள், பகுபதங்கள் என்பவற்றை இனங்கண்டு எழுதுங்கள்.